திரு. மே. அ. இராசகுமார். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவிலில் வேலை செய்யும் அர்ச்சகர்கள் போதிய வருவாய் இல்லாமல், கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவியாகப் போதிய மான்யம் அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். தலைவரவர்களே, இந்த ஆலயம் என்பது ஒரு தனியான நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு ஆலயம் அல்ல. ஒரு 6, 7 ஆலயங்கள் இணைந்த ஒரு ஆலயத்திற்குள்ளே இருக்கிறது, ஒரு துணை ஆலயமாக இருக்கிறது. ஆலயங்கள் அனைத்திற்குமே சேர்ந்து வருடத்திற்கு ரூ. 22,658 தான் வருமானம் வருகிறது என்று தெரிகிறது. ஆகவே இந்த வருமானத்திற்குள்ளேதான் அந்த 6, 7 ஆலயங்களுடைய நிர்வாகமும் நடைபெற வேண்டியிருக்கிறது. அந்த வருமானத்தை வைத்துத்தான் அந்தப் பணியாளர்களுக்கு அல்லது அர்ச்சகர்களுக்கு ஊதியம் போன்ற சம்பளப் பட்டுவாடாக்கள், அல்லது படித்தரங்கள் எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் அதைப் பரிசீலிக்கமுடியும்.

பாம்புத் தோல் ஏற்றுமதிக்கான தடை.

6 (*வினா எண் 18168) திரு. பாபு ஜனார்த்தனன். மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்புத்தோல் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடையாக சட்டங்கள் போட்டிருப்பது உண்மையா?

(ஆ) அதுகுறித்து மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு கடிதம் எழுதி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பெருவாரியாக பாம்பைக் கொன்று தோலை ஏற்றுமதி செய்கிறார்கள். பத்திரிக்கைகளில் படிக்கும்போது பாம்புத் தோலைவிட பாம்பு விஷத்தை ஏற்றுமதி செய்தால் அதிக பணம் கிடைக்குமென்று செய்திகள் வருகின்றன. அந்தப்பாம்பைப் பிடித்து, கொன்று, தோல் எடுத்து சம்பாதிப்பதை விட விஷம் எடுத்தால் அதிக பணம் கிடைக்கும். இப்படிப்பட்ட காரியத்தை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். துணைத் தலைவரவர்களே, பாம்பைக் கொல்வது அல்லது விஷம் எடுப்பதற்காக அவைகளைத் துன்புறுத்திக் கொல்வதில் ஈடுபடுகிற முயற்சி எல்லாம் இப்போது கடுமையான குற்றங்கள் எனக் கருதப் பட்டு, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பாம்பைக் கொல்லாமலேயே அதனுடைய விஷத்தை எடுக்கின்ற சில முயற்சிகள் அரசினிடத்திலே எழுதி அனுமதி

பெற்று, நடைபெறுகிறது, அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அனுமதியைப் பெற்றுக்கொண்டதற்குப் பிறகு, அவர்கள் பாம்பைக் கொல்லாமலேயே விஷத்தை எடுக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க முடியாது. பொதுவாகவே நாம் எண்ணுகிறதைப் போல, பாம்பினாலே ஏற்படுகிற அபாயம் மக்களுக்கு மிக மிகக் குறைவு. அந்தப் பாம்பை அழித்து விடுவதனாலே, அந்தப் பாம்பு கொல்லுகின்ற எலிகள் உயிரோடு இருக்கிற காரணத்தினாலே ஏற்படுகிற அபாயம் மிகப் பெரிய அளவிலே இருப்பதுதான், இருக்கிற உண்மையாகும்.

செங்கை மாவட்டத்திலுள்ள எல்லா ஏரிகளிலும் கருவேலங் கன்றுகளை நடும் திட்டம்.

7 (*வினா எண் 18612) திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம். மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டத்தில் உள்ள எல்லா ஏரிகளிலும் ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும் சத்துள்ள உரமான வண்டல் கிடைக்கவும் கருவேலங் கன்றுகளை நட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இம்மரங்களைப் பாதுகாக்கவும் பஞ்சாயத்துக்களுக்கு வருமான ஆதாரங்களைப் பெருக்கவும் பஞ்சாயத்துக்களுக்கும் இதிலிருந்து வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். (அ) எல்லா ஏரிகளிலும், குளக்கரையோரங்களிலும் மரங்கள் நடும் பணி ஏற்கனவே தொடங்கி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(ஆ) இதுவரை பஞ்சாயத்துக்களுக்கு சொந்தமான இடங்களில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் தோட்டங்களை ஏலத்தில் விற்பனை செய்யும்போது கிடைக்கும் வருவாயில் 50 சதவீதம் அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு வழங்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான இடங்களில் மட்டுமின்றி, அரசுக்குச் சொந்தமான மற்ற எல்லா இடங்களிலும் உற்பத்தி செய்யப்படும் தோட்டங்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாயில் 50 சதவீதம் அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு வழங்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பல ஏரிகளை ஆக்கிரமிப்பு செய்துகொண்டு, அங்கே மின்சாரம் இணைப்புகளை பெற்று, ஒருசிலர் அந்த ஏரிகளில் தண்ணீர் நிற்கின்ற காலத்திலே வெட்டி விடுவதால் பயிர்களுக்குத் தேவையான தண்ணீர்ப் பாசனம் குறைந்துகொண்டிருக்கிறது. அதை ஆக்கமுறையிலே நீக்குவதற்கு அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.